ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவாலி திருநகரி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவாலி திருநகரி

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
    ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெருமாள் திருமொழி – மன்னு புகழ்

ஆலின் இலைப் பாலகனாய் ⋆
அன்றுலகம் உண்டவனே ⋆
வாலியை கொன்றரசு ⋆
இளைய வானரத்துக்களித்தவனே ⋆
காலின் மணி கரை அலைக்கும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆
ஆலி நகர்க்கதிபதியே ⋆
அயோத்திமனே ! தாலேலோ ! ‖ **8.7** ‖

## பெரிய திருமொழி – அன்றாயர்

‡ அன்றாயர் குலக் கொடியோடு ⋆
அணி மா மலர் மங்கையொடன்பளவி ⋆
அவுணர்க்கென்றானும் இரக்கம் இலாதவனுக்கு ⋆
உறையும் இடம் ஆவது ⋆
இரும் பொழில் சூழ் நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை ⋆
தடம் திகழ் கோவல் நகர் ⋆

நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.1** ‖

## பெரிய திருமொழி – வந்து

‡ வந்துனதடியேன் மனம் புகுந்தாய் ⋆
புகுந்ததற் பின் வணங்கும் ⋆
என் சிந்தனைக்கினியாய் ⋆
திருவே ! என் ஆர் உயிரே ⋆
அந்தளிர் அணியார் ⋆
அசோகின் இளந் தளிர்கள் கலந்து ⋆
அவை எங்கும் செந்தழல் புரையும் ⋆
திரு ஆலி அம்மானே ! ‖ **3.5.1** ‖

நீலத் தட வரை ⋆
மா மணி நிகழக் கிடந்தது போல் ⋆
அரவணை வேலைத்தலைக் கிடந்தாய் ⋆
அடியேன் மனத்திருந்தாய் ⋆
சோலைத் தலைக் கண மா மயில் நடம் ஆட ⋆
மழை முகில் போன்றெழுந்து ⋆
எங்கும் ஆலைப் புகை கமழும் ⋆
அணி ஆலி அம்மானே ‖ **3.5.2** ‖

நென்னல் போய் வரும் என்றெண்ணி இராமை ⋆
என் மனத்தே புகுந்தது ⋆
இம்மைக்கென்றிருந்தேன் ⋆
எறி நீர் வளஞ்செறுவில் ⋆
செந்நெல் கூழை வரம்பொரீ இ ⋆
அரிவார் முகத்தெழு வாளை போய் ⋆

கரும்பந்நற்காடணையும் ⋆
அணி ஆலி அம்மானே ॥ **3.5.3** ॥

மின்னில் மன்னு நுடங்கிடை ⋆
மடவார் தம் சிந்தை மறந்து வந்து ⋆
நின் மன்னு சேவடிக்கே ⋆
மறவாமை வைத்தாயால் ⋆
புன்னை மன்னு செருந்தி ⋆
வண் பொழில் வாய் அகன் பணைகள் கலந்து ⋆
எங்கும் அன்னம் மன்னும் வயல் ⋆
அணி ஆலி அம்மானே ॥ **3.5.4** ॥

நீடு பன்மலர் மாலை இட்டு ⋆
நின் இணை அடி தொழுதேத்தும் ⋆
என் மனம் வாட நீ நினையேல் ⋆
மரம் எய்த மா முனிவா ! ⋆
பாடல் இன் ஒலி சங்கின் ஓசை பரந்து ⋆
பல் பணையால் மலிந்து ⋆
எங்கும் ஆடல் ஓசை அறா ⋆
அணி ஆலி அம்மானே ॥ **3.5.5** ॥

கந்த மாமலர் எட்டும் இட்டு ⋆
நின் காமர் சேவடி கை தொழுதெழும் ⋆
புந்தியேன் மனத்தே ⋆
புகுந்தாயைப் போகல் ஒட்டேன் ⋆
சந்தி வேள்வி சடங்கு நான்மறை ⋆
ஓதி ஓதுவித்தாதியாய் வரும் ⋆

அந்தணாளர் அறா ⋆
அணி ஆலி அம்மானே ॥ **3.5.6** ॥

உலவு திரைக் கடல் பள்ளி கொண்டு வந்து ⋆
உன் அடியேன் மனம் புகுந்த ⋆
அப்புலவ ! புண்ணியனே ! ⋆
புகுந்தாயைப் போகல் ஒட்டேன் ⋆
நிலவு மலர்ப் புன்னை நாழல் நீழல் ⋆
தண் தாமரை மலரின் மிசை ⋆
மலி அலவன் கண் படுக்கும் ⋆
அணி ஆலி அம்மானே ॥ **3.5.7** ॥

சங்கு தங்கு தடங்கடல் ⋆
கடல் மல்லையுள் கிடந்தாய் ⋆
அருள் புரிந்திங்கென்னுள் புகுந்தாய் ⋆
இனிப் போயினால் அறையோ ! ⋆
கொங்கு செண்பக மல்லிகை மலர் புல்கி ⋆
இன்னிள வண்டு போய் ⋆
இளந் தெங்கின் தாதளையும் ⋆
திரு ஆலி அம்மானே ॥ **3.5.8** ॥

ஓதி ஆயிர நாமமும் பணிந்தேத்தி ⋆
நின் அடைந்தேற்கு ⋆
ஒரு பொருள் வேதியா ! அரையா ! ⋆
உரையாய் ஒரு மாற்றம் எந்தாய் ! ⋆
நீதி ஆகிய வேத மா முனியாளர் ⋆
தோற்றம் உரைத்து ⋆

மற்றவர்க்காதியாய் இருந்தாய் ! ⋆
அணி ஆலி அம்மானே ॥ **3.5.9** ॥

‡ புல்லி வண்டறையும் பொழில் புடை சூழ் ⋆
தென்னாலி இருந்த மாயனை ⋆
கல்லின் மன்னு திண் தோள் ⋆
கலியன் ஒலி செய்த ⋆
நல்ல இன்னிசை மாலை ⋆
நாலும் ஓர் ஐந்தும் ஒன்றும் நவின்று தாம் ⋆
உடன் வல்லராய் உரைப்பார்க்கு ⋆
இடம் ஆகும் வான் உலகே ॥ **3.5.10** ॥

## பெரிய திருமொழி – தூவிரிய

‡ தூவிரிய மலர் உழக்கித் ⋆
துணையோடும் பிரியாதே ⋆
பூவிரிய மது நுகரும் ⋆
பொறி வரிய சிறு வண்டே ! ⋆
தீவிரிய மறை வளர்க்கும் ⋆
புகழ் ஆளர் திருவாலி ⋆
ஏவரி வெம் சிலையானுக்கு ⋆
என் நிலைமை உரையாயே ॥ **3.6.1** ॥

பிணி அவிழும் நறு நீல ⋆
மலர் கிழியப் பெடையோடும் ⋆
அணிமலர் மேல் மது நுகரும் ⋆
அறு கால சிறு வண்டே ! ⋆
மணி கெழுநீர் மருங்கலரும் ⋆
வயல் ஆலி மணவாளன் ⋆

பணி அறியேன் நீ சென்று ⋆
என் பயலை நோய் உரையாயே ॥ **3.6.2** ॥

நீர் வானம் மண் எரி காலாய் ⋆
நின்ற நெடுமால் ⋆
தன் தார் ஆய நறுந் துளவம் ⋆
பெரும் தகையேற்கருளானே ⋆
சீர் ஆரும் வளர் பொழில் சூழ் ⋆
திருவாலி வயல் வாழும் ⋆
கூர் வாய சிறு குருகே ! ⋆
குறிப்பறிந்து கூறாயே ॥ **3.6.3** ॥

தான் ஆக நினையானேல் ⋆
தன் நினைந்து நைவேற்கு ⋆
ஓர் மீன் ஆய கொடி நெடு வேள் ⋆
வலி செய்ய மெலிவேனோ ⋆
தேன் வாய வரி வண்டே ! ⋆
திருவாலி நகர் ஆளும் ⋆
ஆன் ஆயற்கென் உறு நோய் ⋆
அறியச் சென்றுரையாயே ॥ **3.6.4** ॥

வாள் ஆய கண் பனிப்ப ⋆
மென் முலைகள் பொன் அரும்ப ⋆
நாள் நாளும் ⋆
நின் நினைந்து நைவேற்கு ⋆
ஓ ! மண் அளந்த தாளாளா ! தண் குடந்தை நகர் ஆளா ! ⋆
வரை எடுத்த தோளாளா ⋆

என் தனக்கு ⋆
ஓர் துணையாளன் ஆகாயே ॥ **3.6.5** ॥

தார் ஆய தண் துளவ ⋆
வண்டுழுத வரை மார்பன் ⋆
போர் ஆனைக் கொம்பொசித்த ⋆
புட்பாகன் என் அம்மான் ⋆
தேர் ஆரும் நெடு வீதித் ⋆
திருவாலி நகர் ஆளும் ⋆
கார் ஆயன் என்னுடைய ⋆
கன வளையும் கவர்வானோ ॥ **3.6.6** ॥

கொண்டரவத் திரை உலவு ⋆
குரை கடல் மேல் குலவரை போல் ⋆
பண்டரவின் அணைக் கிடந்து ⋆
பார் அளந்த பண்பாளா ! ⋆
வண்டமரும் வளர் பொழில் சூழ் ⋆
வயல் ஆலி மைந்தா ! ⋆
என் கண் துயில் நீ கொண்டாய்க்கு ⋆
என் கன வளையும் கடவேனோ ॥ **3.6.7** ॥

குயில் ஆலும் வளர் பொழில் சூழ் ⋆
தண் குடந்தைக் குடம் ஆடீ ⋆
துயிலாத கண் இணையேன் ⋆
நின் நினைந்து துயர்வேனோ ! ⋆
முயல் ஆலும் இள மதிக்கே ⋆
வளை இழந்தேற்கு ⋆

இது நடுவே வயல் ஆலி மணவாளா ! ⋆
கொள்வாயோ மணி நிறமே ‖ **3.6.8** ‖

நிலை ஆளா ! நின் வணங்க ⋆
வேண்டாயே ஆகிலும் ⋆
என் முலை ஆள ஒரு நாள் ⋆
உன் அகலத்தால் ஆளாயே ⋆
சிலை ஆளா ! மரம் எய்த திறல் ஆளா ! ⋆
திரு மெய்ய மலையாள ⋆
நீ ஆள ⋆
வளை ஆள மாட்டோமே ‖ **3.6.9** ‖

‡ மை இலங்கு கருங்குவளை ⋆
மருங்கலரும் வயல் ஆலி ⋆
நெய் இலங்கு சுடர் ஆழிப் ⋆
படையானை நெடுமாலை ⋆
கை இலங்கு வேல் கலியன் ⋆
கண்டுரைத்த தமிழ் மாலை ⋆
ஐ இரண்டும் இவை வல்லார்க்கு ⋆
அரு வினைகள் அடையாவே ‖ **3.6.10** ‖

## பெரிய திருமொழி – கள்வன்கொல்

‡ கள்வன் கொல் யான் அறியேன் ⋆
கரியான் ஒரு காளை வந்து ⋆
வள்ளி மருங்குல் என்தன் ⋆
மட மானினைப் போத என்று ⋆
வெள்ளி வளைக் கைப் பற்றப் ⋆
பெற்ற தாயரை விட்டகன்று ⋆

அள்ளலம் பூங்கழனி ⋆
அணி ஆலி புகுவர் கொலோ ! ‖ **3.7.1** ‖

பண்டிவன் ஆயன் நங்காய் ! ⋆
படிறன் புகுந்து ⋆
என் மகள் தன் தொண்டையம் செம் கனிவாய் ⋆
நுகர்ந்தானை உகந்து ⋆
அவன் பின் கெண்டை ஒண் கண் மிளிரக் ⋆
கிளி போல் மிழற்றி நடந்து ⋆
வண்டமர் கானல் மல்கும் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ‖ **3.7.2** ‖

அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் ! ⋆
அரக்கர் குலப் பாவை தன்னை ⋆
வெஞ்சின மூக்கரிந்த ⋆
விறலோன் திறம் கேட்கில் மெய்யே ⋆
பஞ்சிய மெல்லடி ⋆
எம் பணைத் தோளி பரக்கழிந்து ⋆
வஞ்சியந் தண் பணை சூழ் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ‖ **3.7.3** ‖

ஏதவன் தொல் பிறப்பு ⋆
இளையவன் வளை ஊதி ⋆
மன்னர் தூதுவன் ஆயவன் ஊர் ⋆
சொலுவீர்கள் ! சொலீர் அறியேன் ⋆
மாதவன் தன் துணையா நடந்தாள் ⋆
தடம் சூழ் புறவில் ⋆

போது வண்டாடு செம்மல் ⋆
புனல் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.4** ॥

தாய் எனை என்றிரங்காள் ⋆
தடந்தோளி தனக்கமைந்த ⋆
மாயனை மாதவனை ⋆
மதித்தென்னை அகன்ற இவள் ⋆
வேய் அன தோள் விசிறிப் ⋆
பெடை அன்னம் என நடந்து ⋆
போயின பூங்கொடியாள் ⋆
புனல் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.5** ॥

‡ என் துணை என்றெடுத்தேற்கு ⋆
இறையேனும் இரங்கிற்றிலள் ⋆
தன் துணையாய என்தன் ⋆
தனிமைக்கும் இரங்கிற்றிலள் ⋆
வன் துணை வானவர்க்காய் ⋆
வரம் செற்றரங்கத்துறையும் ⋆
இன் துணைவனொடும் போய் ⋆
எழில் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.6** ॥

அன்னையும் அத்தனும் என்று ⋆
அடியோமுக்கிரங்கிற்றிலள் ⋆
பின்னை தன் காதலன் தன் ⋆
பெருந்தோள் நலம் பேணினளால் ⋆
மின்னையும் வஞ்சியையும் ⋆
வென்றிலங்கும் இடையாள் நடந்து ⋆

புன்னையும் அன்னமும் சூழ் ⋆
புனல் ஆலி புகுவர் கொலோ ! ॥ **3.7.7** ॥

முற்றிலும் பைங்கிளியும் ⋆
பந்தும் ஊசலும் பேசுகின்ற ⋆
சிற்றில் மென் பூவையும் விட்டகன்ற ⋆
செழுங்கோதை தன்னை ⋆
பெற்றிலேன் முற்றிழையைப் ⋆
பிறப்பிலி பின்னே நடந்து ⋆
மற்றெல்லாம் கை தொழப் போய் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.8** ॥

காவியம் கண்ணி எண்ணில் ⋆
கடி மா மலர்ப் பாவை ஒப்பாள் ⋆
பாவியேன் பெற்றமையால் ⋆
பணைத் தோளி பரக்கழிந்து ⋆
தூவி சேர் அன்னம் அன்ன நடையாள் ⋆
நெடுமாலொடும் போய் ⋆
வாவியந் தண் பணை சூழ் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.9** ॥

‡ தாய் மனம் நின்றிரங்கத் ⋆
தனியே நெடுமால் துணையா ⋆
போயின பூங்கொடியாள் ⋆
புனல் ஆலி புகுவர் என்று ⋆
காய் சின வேல் கலியன் ⋆
ஒலி செய் தமிழ் மாலை பத்தும் ⋆

மேவிய நெஞ்சுடையார் ⋆
தஞ்சம் ஆவது விண்ணுலகே ‖ **3.7.10** ‖

### பெரிய திருமொழி – நும்மைத் தொழுதோம்

‡ சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே ! ⋆
மருவினிய மைந்தா ⋆
அந்தண் ஆலி மாலே ! ⋆
சோலை மழ களிறே ! ⋆
நந்தா விளக்கின் சுடரே ! ⋆
நறையூர் நின்ற நம்பீ ⋆
என் எந்தாய் ! இந்தளூராய் ! ⋆
அடியேற்கிறையும் இரங்காயே ! ‖ **4.9.2** ‖

### பெரிய திருமொழி – மான் கொண்ட

முந்நீரை முன் நாள் ⋆
கடைந்தானை ⋆
மூழ்த்த நாள் அந்நீரை மீனாய் ⋆
அமைத்த பெருமானை ⋆
தென்னாலி மேய ⋆
திருமாலை எம்மானை ⋆
நன்னீர் வயல் சூழ் ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.2** ‖

### பெரிய திருமொழி – கைம்மானம்

எஞ்சா வெந்நரகத்து ⋆
அழுந்தி நடுங்குகின்றேற்கு ⋆
அஞ்சேல் என்றடியேனை ⋆

ஆட்கொள்ள வல்லானை ⋆
நெஞ்சே ! நீ நினையாது ⋆
இறைப் பொழுதும் இருத்தி கண்டாய் ⋆
மஞ்சார் மாளிகை சூழ் ⋆
வயல் ஆலி மைந்தனையே ॥ **8.9.6** ॥

கற்றார் பற்றறுக்கும் ⋆
பிறவிப் பெருங்கடலே ⋆
பற்றா வந்தடியேன் ⋆
பிறந்தேன் பிறந்த பின்னை ⋆
வற்றா நீர் வயல் சூழ் ⋆
வயல் ஆலி அம்மானைப் பெற்றேன் ⋆
பெற்றதுவும் ⋆
பிறவாமை பெற்றேனே ॥ **8.9.8** ॥

## பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

வேலை ஆல் இலைப் ⋆
பள்ளி விரும்பிய ⋆
பாலை ஆர் அமுதத்தினைப் ⋆
பைந்துழாய் ⋆
மாலை ஆலியில் ⋆
கண்டு மகிழ்ந்து போய் ⋆
ஞாலம் உன்னியைக் காண்டும் ⋆
நாங்கூரிலே ॥ **10.1.3** ॥

## பெரிய திருமொழி – நீள் நாகம்

தூயானைத் ⋆
தூய மறையானை ⋆
தென் ஆலி மேயானை ⋆
மேவாள் உயிர் உண்டமுதுண்ட வாயானை ⋆
மாலை வணங்கி ⋆
அவன் பெருமை பேசாதார் ⋆
பேச்சென்றும் ⋆
பேச்சல்ல கேட்டாமே ॥ **11.7.3** ॥

## பெரிய திருமொழி – மாற்றமுள

படை நின்ற ⋆
பைந் தாமரையோடு ⋆
அணி நீலம் மடை நின்றலரும் ⋆
வயலாலி மணாளா ⋆
இடையன் எறிந்த மரமே ⋆
ஒத்திராமே ⋆
அடைய அருளாய் ⋆
எனக்குந்தன் அருளே ॥ **11.8.6** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

நெஞ்சுருகிக் கண் பனிப்ப நிற்கும் சோரும் ⋆
நெடிதுயிர்க்கும் உண்டறியாள் உறக்கம் பேணாள் ⋆
நஞ்சரவில் துயில் அமர்ந்த நம்பீ ! என்னும் ⋆
வம்பார் பூம் வயல் ஆலி மைந்தா என்னும் ⋆
அஞ்சிறைய புட்கொடியே ஆடும் பாடும் ⋆
அணி அரங்கம் ஆடுதுமோ தோழீ என்னும் ⋆

என் சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன் ⋆
இரு நிலத்தோர் பழி படைத்தேன் ஏ பாவம்மே ! ॥ **12** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே ⋆
நான் அவனைக் காரார் திருமேனி காணும் அளவும் போய் ⋆
‡ சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே ⋆
மதிட்கச்சி ஊரகமே பேரகமே ⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே ⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ⋆
‡ ஆராமம் சூழ்ந்த அரங்கம் ॥ **36** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

மா மலர் மேல்
அன்னம் துயிலும் அணி நீர் வயல் ஆலி ⋆
என்னுடைய இன் அமுதை எவ்வுள் பெரு மலையை ⋆
கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை ⋆
மின்னை இரு சுடரை வெள்ளறையுள் கல்லறை மேல்
பொன்னை ⋆ மரதகத்தைப் புட்குழி எம் போர் ஏற்றை ⋆
‡மன்னும் அரங்கத்தெம் மா மணியை ॥ **63** ॥

திரு அம்.ர்தகடவல்லி சமேத லக்ச்மீந்.ர்சிம்கன்
அம்.ர்தவல்லி சமேத வேதராசன் திருவடிகளே சரணம்